**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No . 299/2023**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-1/PW-1 |
| Name | : பசுபதி |
| Father/Husband's Name | : கணநாதன் |
| Village | : வல்லம் |
| Taluk | : செங்கல்பட்டு |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 42 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17.12.2024.

**முதல் விசாரணை–**

நான் தற்போது செட்டிபுண்ணியம் கிராமத்தில் கிராம நிர்வாக அதிகாரியாக பணியாற்றி வருகிறேன். கடந்த 12.01.2023 ஆம் தேதி நான் வல்லம் கிராமத்தின் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்தபோது, அன்று காலை 5.45 மணியளவில் செங்கல்பட்டு - திருக்கழுக்குன்றம் மார்க்கமாக சுமார் 55 வயது மதிக்கத்தக்க ஆண் நபர் சாலையோரமாக இருந்த ஆஷாபுரா மரக்கடை அருகே சாலையை கடக்கும்போது செங்கல்பட்டு -திருக்கழுக்குன்றம் நோக்கி சென்ற அரசு பேருந்தின் ஓட்டுநர் அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும் சாலையை கடந்த நபர்மீது மோதியது. அதில் அவருக்கு தலை மற்றும் கையில் பலத்த காயம் ஏற்பட்டு அங்கிருந்து பொதுமக்கள் உதவியுடன் ஆம்புலன்சில் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தவர் 12.01.2023 இறந்து விட்டதாக அதிகாரிகள் மூலமாக எனக்கு தகவல் கிடைத்தது. எனவே, இது சம்பந்தமாக

மேல் நடவடிக்கைகாக தாலுக்கா காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். **அந்த புகார் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை**

விபத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். ஊர் மக்கள் சொல்லிதான் எனக்கு மேற்படி விபத்தை பற்றி தெரியும். மேற்படி பேருந்தின் வாகன எண் எனக்கு தெரியுமா என்றால் தற்போது ஞாபகம் இல்லை. அங்கிருந்த பொதுமக்கள் மற்றும் எனக்கு போன் செய்த அதிகாரிகள் பேருந்தின் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டினார் என்று கூறினார்கள்,அப்படிதான் எனக்கு இதன் விவரம் தெரிய வந்தது. போலீசார் கேட்டுகொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R.D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.